புரட்சிப் பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com
ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2050 | ஜனவரி 24, 2019 | புரட்சி 18 | முழக்கம் 02 | விலை: ரூ.3.00

# 7 தமிழர் விடுதலை: ஈழ ஏதிலியர் உரிமைகளை வலியுறுத்தி

# தமிழக முதல்வரிடம் கழகத் தலைவர்- தோழர்கள் நேரில் மனு

14-1-2019 இரவு 8-00 மணியளவில் கழக வெளியீட்டுச் செயலாளர் கோபி இளங்கோவன், சேலம் மாவட்ட செயலாளர் மேட்டூர் கோவிந்தராசு, ஈரோடு மாவட்ட செயலாளர் பவானி வேணுகோபால், சேலம் மாநகர செயலாளர் பரமேசு ஆகியோருடன் சேலத்தில் தமிழக முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி அவர்களை கழகத் தலைவர் கொளத்தூர் மணி சந்தித்து பேரறிவாளன் முதலான எழுவர் விடுதலைக்கு இயன்றதனைத்தையும் செய்யக் கோரியும் ஏதிலியர் உரிமைகளை வலியுறுத்தியும் விண்ணப்பத்தைக் கையளித்தனர்.

முதல்வரும் தாங்களும் எழுவர் விடுதலையில் அக்கறை கொண்டிருப்பதாகவும், விரைவில் விடுதலைக்கு ஆவன செய்வதாகவும் உறுதியளித்தார்.

முதல்வரிடம் வழங்கப்பட்ட கோரிக்கை மனு விவரம்:

திரு. இராசிவ் காந்தி கொலை வழக்கில் தண்டிக்கப் பெற்ற பேரறிவாளன், முருகன், சாந்தன், நளினி, இரவிச்சந்திரன், இராபர்ட் பயஸ், ஜெயக் குமார் ஆகிய எழுவரும் வாழ்நாள் சிறையாளர்களாக இருந்து வருவதும் அவர்கள் விடுதலைக் குறித்து ஒட்டுமொத்த தமிழகமும் அனைந்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் உள்ளிட்ட தமிழகத்தில் உள்ள பெரும்பாலான கட்சிகளும் தமிழக அரசும் கவலையோடும் அக்கறையோடும் இருப்பது தாங்கள் அறிந்ததே. அவர்கள் 27 ஆண்டுகளுக்கு மேல் சிறையில் கழித்துவிட்ட நிலையில் தங்கள் விடுதலை வேண்டி மத்திய மாநில அரசுகளையும், இந்திய உச்சநீதி மன்றத்தையும் முறைப்படி அணுகினார்கள். அந்தச் செயல்வழியில் இறுதியாக, உச்ச நீதிமன்றத்தின் வழிகாட்டுதலை அடிப்படையாகக் கொண்டு தமிழக அரசு அவர்களை விடுதலை செய்ய செப்டம்பர் 9,2018 அன்று அமைச்சரவையில் முடிவு எடுத்து, ஆளுநரின் ஏற்புக்காக அனுப்பி வைத்தது. ஆளுநரின் ஒப்புதலுக்காக அந்த ஏழு சிறையாளர் களும் அவர்தம் குடும்பத்தினரும் மட்டுமல்லாமல், மாந்தவுரிமைகள்பால் அக்கறை கொண்ட அனைவரும் ஆவலோடு காத்துள்ளார்கள். பார்க்கப் போனால், தமிழக மக்கள் இது குறித்துக் கொண்டுள்ள கவலையின் அடையாளமாகவே இலட்சக்கணக்கானவர்கள் அஞ்சலட்டைகள் ஊடாக ஆளுநருக்கு விண்ணப்பித்துள்ளார்கள்.

மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான தமிழக அரசு கடந்த பிப்ரவரி 19, 2014 அன்றே இவர்களை விடுதலை செய்யும் முடிவை அமைச்சரவைத் தீர்மானமாக எடுத்ததும் தாங்கள் அறிந்ததே. அதிலிருந்தே இப்போது ஐந்து ஆண்டுகள் நிறைவடையப் போகின்றது. எழுவரின் உறவுகள் ஏங்கிய நெஞ்சத்தோடு சிறைக் கதவுகள் திறக்கும் நாளுக்காக காத்திருக்கின்றனர். பிரிவு 161இன் படி மாநில அரசு தண்டனைக் குறைப்புத் தொடர்பில் எடுக்கும் முடிவை ஆளுநரால் மறுக்க முடியாதென்பது பல்வேறு வழக்குகளில் இந்திய உச்சநீதிமன்றமும் சென்னை உயர்நீதிமன்றமும் உறுதிசெய்த நிலைப்பாடாகும். இந்த எழுவரில் ஒருவரான நளினி தொடர்பான வழக்கும் இதில் ஒன்றாகும். இப்போது மேதகு ஆளுநர் பன்வாரிலால் புரோகித் கடந்த நான்கு மாதங்களாக தமிழக அரசின் பரிந்துரை தீர்மானத்தை ஏற்காமலும் மறுக்காமலும் காலந்தாழ்த்தி வரும் நிலையில் அவருக்கு மீண்டும் ஒரு நினைவூட்டலை தமிழக அரசு அனுப்பியிருப்பதாக அறிகிறேன். தமிழக அரசு சார்பில் தமிழக மக்களின் உணர்வை வெளிப்படுத்தும் வகையில் ஆளுநரை வலியுறுத்தி பின்வரும் நடவடிக்கைகளை செய்வது எழுவரின் விரைவான விடுதலைக்கு உதவும் என்று கருதுகிறேன்.

1. வெளிப்படையாக ஆளுநருக்கு வேண்டுகோள் விடுத்து தமிழக மக்கள் கவலை கொண் டிருப்பதை அறியச் செய்யலாம்.
2. அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி அனைத்துக் கட்சிகளின் சார்பாகவும் ஒரு தீர்மானம் இயற்றி இவர்களின் விடுதலைத் தீர்மானத்தை உடனே ஏற்குமாறு ஆளுநரை வலியுறுத்தலாம்.
3. எழுவர் விடுதலைத் தீர்மானத்தை ஆளுநர் ஏற்க வேண்டி சட்டமன்றப் பேரவையில் தீர்மானம் இயற்றி ஆளுநருக்கு அனுப்பி வைக்கலாம்.

தமிழர் எழுவர் விடுதலை என்பது மாந்த உரிமை, மாநில உரிமை ஆகிய இரண்டும் இணைந்த பிரச்சனையாக உள்ளது. அவர்கள் விடுதலையின் வாயிலில் நீண்ட காலமாக காத்துக் கிடக்கின்றனர். சிறைக் கதவுகளைத் திறப்பதற்கான திறவுகோலை வரலாறு தங்களிடம் விட்டுவைத்துள்ளது. எழுவரின் விடுதலைக்கு ஆளுநரிடம் ஒப்புதல் பெறுவதற்கு என்னென்ன வழிகளில் முயற்சி எடுக்கலாம் என்பதைத் தாங்களும் தமிழக அரசும் கருதிப் பார்த்து காலத் தாழ்வின்றி ஆவன செய்வீர்கள் என்று நம்புகிறேன் என்று முதல்வரிடம் நேரில் வழங்கப்பட்ட கோரிக்கை மனுவில் வலியுறுத்தப் பட்டுள்ளது.

### ஏதிலியர் பிரச்சினை

இலங்கையில் சிங்களப் பேரினவாத அரசின் இன ஒடுக்குமுறை, இன அடக்குமுறை, இனக் கொலைக் கொடுமைகளால் அங்கிருந்து உயிர்தப்பித் தஞ்சம் நாடித் தமிழகம் வரும் ஈழத் தமிழ் மக்களை ஏற்று வாழ வைக்கும் உரிமையும் கடமையும் தமிழ்நாட்டு மக்களுக்கும் தமிழக அரசுக்கும் உண்டு. இவ்வடிப் படையில், இந்தியாவில், குறிப்பாகத் தமிழகத்தில் வாழ்ந்துவரும் இலட்சத்துக்கு மேற்பட்ட தமிழீழ ஏதிலியர் (அகதிகள்) நலவுரிமைகளுக்காகத் தமிழீழ ஏதிலியர் உரிமைக் கூட்டமைப்பின் சார்பில் பின்வரும் கோரிக்கைகளைத் தங்களிடம் வலியுறுத்துகிறோம்.

1) இலங்கைத் தமிழ் அகதிகள் எனப்படும் தமிழீழ ஏதிலியர் அனைவர்க்கும் இந்நாட்டில் இடைக் காலக் குடியுரிமை வழங்க வேண்டும் என்று தமிழக அரசு இந்திய அரசை வலியுறுத்த வேண்டும்.
2) தமிழீழ ஏதிலியரின் அரசியல், குடியியல் உரிமை களும் பொருளியல் உரிமைகளும் சட்டத்திலும் நடைமுறையிலும் உறுதி செய்யப்பட வேண்டும்.
3) திபெத்துப் போன்ற பிறநாட்டு ஏதிலியரோடு ஒப்பிட்டால் தமிழீழ ஏதிலியர்க்கு எதிராகப் பாகுபாடு காட்டுவதை இந்திய அரசு கைவிடுமாறு தமிழக அரசு வலியுறுத்த வேண்டும்.
4) சிறப்பு முகாம்களில் அடைத்து வைக்கப் பட்டுள்ள ஈழத் தமிழ் ஏதிலியர் அனைவரையும் உடனடியாக விடுதலை செய்வதோடு, தமிழக அரசு அம்முகாம்களைக் கலைத்துவிட வேண்டும்.
5) ஏதிலியர் முகாம்களை சிறை முகாம்கள் போல் கருதி நடத்துவதைக் கைவிட வேண்டும்; அவற்றில் காவல் துறை உளவுப் பிரிவின் ஆதிக்கமும் தலையீடும் இல்லாமற் செய்யவேண்டும்; ஏதிலியர்க்கு எதிராக மாந்த உரிமை மீறல்களில் ஈடுபடும் அரசின் காவல் துறை, வருவாய்த் துறை அதிகாரிகள் கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டும். முகாம்களுக்கு வெளியேயும் ஏதிலியர் வாழ்வில் காவல் துறைத் தலையீடும் கெடுபிடியும் இல்லாமற்செய்ய வேண்டும்.
6) தமிழீழ ஏதிலியரின் கல்வியுரிமையும் வேலை வாய்ப்பும் உறுதி செய்யப்பட வேண்டும்; ஏதிலிக் குழந்தைகள் அனைவர்க்கும் கட்டாய இலவயக் கல்வி கிடைக்க வகை செய்ய வேண்டும். ஏதிலி மாணவர்கள் இந்நாட்டில் மருத்துவம்,

4ஆம் பக்கம்

## மயிலாடுதுறையில் ஆக்கிரமிப்புக் கோயில்கள் கழக சார்பில் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு மனு

மயிலாடுதுறை பகுதியில் ஆக்கிரமித்து கட்டப்பட்ட 28 நடைபாதைக் கோயில்கள் மற்றும் வழிபாட்டு இடங்களின் பட்டியலை மயிலாடுதுறை வருவாய்த் துறை அதிகாரியிடம் ஜன.21 அன்று கழகத் தோழர்கள் நேரில் பட்டியலாக அளித்தனர். மாவட்ட ஆட்சித் தலைவருக்கு பதிவுத் அஞ்சலிலும் அனுப்பப்பட்டுள்ளது. கழகப் பொறுப்பாளர்கள் இளையராஜா, மகேஷ், செந்தில், மகாலிங்கம், விஜயராகவன், தில்லை நாதன், ராகவன் ஆகியோர் மனு அளிக்க சென்றிருந்தனர்.



# அரசுத் துறைகளில் ஆதிக்கம் செலுத்தும் பார்ப்பன உயர்ஜாதிப் பட்டியல்

அரசுத் துறைகளில் ஆதிக்கம் செலுத்தும் பார்ப்பன உயர்ஜாதிப் பட்டியல்:

1. ஜனாதிபதி செயலகத்தின் மொத்த இடுகைகள் : 49. பார்ப்பனர்கள் - 39 (திறந்த போட்டி) : எஸ்.சி., எஸ்.டி. - 4; பிற்படுத்தப்பட்டோர் - 6.
2. துணை ஜனாதிபதி செயலகத்தின் 7 பதவிகள். இங்கே 7 பார்ப்பனர்கள். எஸ்.சி., எஸ்.டி., - 0; பிற்படுத்தப்பட்டோர் - 0.
3. கேபினட் செயலாளர் பதவிகள் : 20. பார்ப்பனர்கள் - 17. எஸ்.சி., எஸ்.டி., - 1; பிற்படுத்தப்பட்டோர் - 2.
4. பிரதமரின் அலுவலகத்தில் மொத்த பதவிகள் : 35. பார்ப்பனர்கள் - 31. எஸ்.சி., எஸ்.டி., - 2; பிற்படுத்தப்பட்டோர் - 2.
5. விவசாய திணைக் களத்தின் மொத்த இடுகைகள் : 274. பார்ப்பனர்கள் - 259. எஸ்.சி., எஸ்.டி., - 45; பிற்படுத்தப்பட்டோர் - 10.
6. பாதுகாப்பு அமைச்சகம் மொத்த இடுகைகள் : 1379. பார்ப்பனர்கள் - 1300. எஸ்.சி., எஸ்.டி., - 48; பிற்படுத்தப்பட்டோர் - 31.
7. சமூக நல மற்றும் சுகாதார அமைச்சகம் மொத்த இடுகைகள் : 209. பார்ப்பனர்கள் - 132. எஸ்.சி., எஸ்.டி., - 17; பிற்படுத்தப்பட்டோர் - 60.
8. நிதி அமைச்சகத்தின் மொத்த இடுகைகள் : 1008. பார்ப்பனர்கள் - 942. எஸ்.சி., எஸ்.டி., - 20; பிற்படுத்தப்பட்டோர் - 46.
9. பிளானட் அமைச்சில் மொத்த பதவிகள் : 409. பார்ப்பனர்கள் - 327. எஸ்.சி., எஸ்.டி., - 19; பிற்படுத்தப்பட்டோர் - 63.
10. தொழில் அமைச்சகத்தின் மொத்த இடுகைகள் : 74. பார்ப்பனர்கள் - 59. எஸ்.சி., எஸ்.டி., - 4; பிற்படுத்தப்பட்டோர் - 9.
11. கெமிக்கல்ஸ் மற்றும் பெட்ரோலிய அமைச்சகத்தின் மொத்த இடுகைகள் : 121. பார்ப்பனர்கள் - 91. எஸ்.சி., எஸ்.டி., - 9; பிற்படுத்தப்பட்டோர் - 21.
12. கவர்னர் மற்றும் லெப்டினண்ட் கவர்னர் ஒட்டு மொத்தம் : 27. பார்ப்பனர்கள் - 25. எஸ்.சி., எஸ்.டி., - 0; பிற்படுத்தப்பட்டோர் - 2.
13. தூதுவர்கள் வெளி நாட்டில் வாழ்ந்து வருகின்றனர் - 140. பார்ப்பனர்கள் - 140. எஸ்.சி., எஸ்.டி., - 3; பிற்படுத்தப்பட்டோர் - 5.
14. மத்திய அரசு பல்கலைக் கழகத் துணைவேந்தர் - 116. பார்ப்பனர்கள் - 108. எஸ்.சி., எஸ்.டி., - 3; பிற்படுத்தப்பட்டோர் - 5.
15. மத்திய பொதுச் செயலாளர் பதவிகள் : 26. பார்ப்பனர்கள் - 18. எஸ்.சி., எஸ்.டி., - 1; பிற்படுத்தப்பட்டோர் - 7.
16. உயர்நீதிமன்ற நீதிபதி : 330. பார்ப்பனர்கள் - 306. எஸ்.சி., எஸ்.டி., - 4; பிற்படுத்தப்பட்டோர் - 20.
17. உச்சநீதிமன்ற நீதிபதி : 26. பார்ப்பனர்கள் - 23. எஸ்.சி., எஸ்.டி., - 1; பிற்படுத்தப்பட்டோர் - 2.
18. அய். ஏ. எஸ் அதிகாரிகள் : 3600. பார்ப்பனர்கள் - 2750. எஸ்.சி., எஸ்.டி., - 300; பிற்படுத்தப்பட்டோர் - 350.

**டெல்லியை அடிப்படையாக கொண்ட “யங் இந்தியா” எனப்படும் நிறுவனம் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் 2018 ஆம் ஆண்டில் பெறப்பட்ட தகவல்.**

# ‘பொருளாதார’ இடஒதுக்கீட்டைக் கண்டித்துக் கண்டன ஆர்ப்பாட்டங்கள்

திராவிடர் விடுதலைக் கழகம் ஒருங்கிணைப்பில் சமூக நீதி பாதுகாப்பு கூட்டமைப்பு சார்பில் சமூகநீதியை சீர்குலைக்கும் மத்திய பா.ஜ.க அரசின் உயர்சாதிக்கான 10% இட ஒதுக்கீட்டைக் கண்டித்து 11.1.2019 வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு கோவை தெற்கு வட்டாட்சியர் அலுவலகம் முன்பு கண்டன ஆர்ப்பாட்டம் திராவிடர் விடுதலைக் கழக மாநகர மாவட்டத் தலைவர் நேருதாசு தலைமையில் நடைபெற்றது.



தோழர்கள் வெண்மணி (திராவிடர் தமிழர் கட்சி), மலரவன் (புரட்சிகர இளைஞர் முன்னணி) வழக்கறிஞர் சேகர் பி.யு.சி.எல்., இராமசந்திரன் (திவிக), இளவேனில் (தமிழ் புலிகள்), சண்முக சுந்தரம் (தந்தை பெரியார் திராவிடர் கழகம்), எம்.எஸ். வேல்முருகன் (சி.பி.அய். எம்.எல்.), வழக்கறிஞர் சக்திவேல் (சி.பி.அய்.), சபரி தமிழ்நாடு மாணவர் கழகம், ரமேஷ் முற்போக்கு வழக்கறிஞர் சங்கம், இனியவன் ஆதித்தமிழர் முன்னேற்ற கழகம், தண்டபாணி சமூக நீதி கட்சி ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

கூட்டத்திற்கு திவிக தலைமைக் குழு உறுப்பினர் பன்னீர் செல்வம், பாலமுருகன் (பி.யு.சி.எல்.), சிங்கை பிரபாகரன் (திமுக) உட்பட 80 திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். நிர்மல்குமார் (மாநகர மாவட்ட கழகச் செயலாளர்) நன்றி கூறினார்.

**ஈரோட்டில் :** சமூக நீதிக்கு எதிரான பொருளாதார இட ஒதுக்கீட்டைக் கண்டித்தும், பாசிச பாஜக அரசை கண்டித்தும் திராவிடர் விடுதலைக் கழகமும் தமிழ்நாடு மாணவர் கழக ஈரோடு தெற்கு மாவட்டம் சார்பாக 12.01.2019 அன்று வீரப்பன்சத்திரத்தில் மாலை4.30க்கு கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.




திராவிடர் விடுதலைக் கழகத்தின் அமைப்புச் செயலாளர் ப.இரத்தினசாமி தலைமை தாங்கினார். அ. கிருஷ்ணமூர்த்தி (திவிக மாவட்ட அமைப்பாளர்) முன்னிலை வகித்தார். சீ.ரா. சௌந்தர் (தமிழ்நாடு மாணவர் கழக மாவட்ட அமைப்பாளர்) ஒருங்கிணைத்தார். தோழர் வெங்கட் முழக்கத்துடன் ஆர்ப்பாட்டம் தொடங்கியது.

ச. இந்தியப்பிரியன், கணகுறிஞ்சி (தலைவர், மக்கள் சிவில் உரிமைக் கழகம்), இரா. தமிழ்இன்பன் (நிறுவனர், விடுதலை வேங்கைகள் கட்சி), ரவி (புரட்சிகர இளைஞர் முன்னணி), ஆறுமுகம் (ஜனநாயக மக்கள் கழகம்) ஆகியோர் கண்டன உரையாற்றினர். நிகழ்வில் மாவட்ட பொருளாளர் கு. சண்முகப்பிரியன், நகரச் செயலாளர் திருமுருகன், செய்தித் தொடர்பாளர்பிரபு, சிவானந்தம், முகுந்தன், கமலக்கண்ணன், தமிழ்ப்பிரியன், பெரியாரியவாதி புலிமோகன், மாணவர் கழகத்தின் மேட்டூர் திவாகர், யாதவன், பாரதி உள்ளிட்ட கழகத் தோழர்கள்பங்கேற்றனர்.

**உடுமலையில் :** சமுக நீதிக்கு எதிரான உயர் சாதியினருக்கான இட ஒதுக்கீட்டை எதிர்த்து கண்டன ஆர்ப்பாட்டம் உடுமலையில் 18-01-2019 வெள்ளி மாலை 5மணியளவில் திராவிடர் விடுதலைக் கழகத்தின் தலைமைக் குழு உறுப்பினர் மடத்துக் குளம் மோகன், தமிழ்நாடு திராவிடர் கழக ஒருங்கிணைப்பாளர் காசு நாகராஜ், கொங்கு ஆய்வு நடுவம் ரவி, திருப்பூர் தனபால் ராமசாமி, ஆதித் தமிழர் பெரியார் தாசன், அரிதாசு (ஒன்றிய செயலாளர்), ஆனந்த் (நகர தலைவர்), பிரபு, தினேசு (தமிழ்நாடு மாணவர் மன்ற ஒருங்கிணைப்பாளர், சபரி (தமிழ்நாடு மாணவர் கழகப் பொறுப்பாளர், திராவிடர் தமிழர் கட்சி), தங்கவேலு, மடத்துகுளம் கணக்கன், சிவானந்தம் ஆகியோர் பங்கேற்றனர்.



**சென்னையில் :** உயர்சாதிகள் பலனடையும் வகையில் மோடி அரசினால் சட்டமாக்கப்பட்டுள்ள பொருளாதார அடிப்படையிலான 10% இடஒதுக்கீட்டை இரத்து செய்யக் கோரி மே பதினேழு இயக்கத்தின் ஒருங்கிணைப்பில் 19-01-2019 அன்று மாலையில் சென்னை வள்ளுவர் கோட்டம் அருகில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. கண்டன முழக்கங்களுடன் துவங்கிய ஆர்ப்பாட்டத்தில் திராவிடர் கழகத்தின் தோழர் அருள்மொழி, விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தோழர் ஆளூர் ஷா நவாஸ், டிசம்பர் 3 இயக்கத்தின் தோழர் தீபக், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் தோழர் மல்லை.சத்யா, மே பதினேழு இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் தோழர் அருள் முருகன், தமிழர் விடுதலை கழகத்தின் தோழர் சௌ.சுந்தரமூர்த்தி, எஸ்.டி.பி.ஐ. கட்சியின் தோழர் உமர் பாரூக், தந்தைப் பெரியார் திராவிடர் கழகத்தின் தோழர் குமரன், திராவிடர் விடுதலைக் கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், விடுதலை தமிழ்ப் புலிகள் கட்சியின் தோழர் குடந்தை அரசன், தமிழக மக்கள் முன்னணியின் தோழர் பொழிலன், மற்றும் மனிதநேய மக்கள் கட்சியின் தோழர் குணங்குடி ஹனீஃபா, இறுதியாக மே பதினேழு இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் தோழர் திருமுருகன் காந்தி நோக்கத்தை அம்பலப்படுத்தி கண்டன உரையாற்றினர்.



## பெரியார் இயக்கம் சந்தித்த அடக்குமுறைகள் (5)

# 1938 இந்தி எதிர்ப்புப் போராட்டம்


*22.9.2018 அன்று பெரம்பூரில் வடசென்னை மாவட்டக் கழகம் நடத்திய கருத்தரங்கில் கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் 'பெரியார் இயக்கம் சந்தித்த அடக்குமுறைகள்' என்ற தலைப்பில் நிகழ்த்திய உரையிலிருந்து.*

1938ஆம் ஆண்டு அன்றைய சென்னை மாகாணத்தில் இராஜாஜி எனும் பார்ப்பனர் இராஜகோபாலாச்சாரியாரை முதலமைச்சராகக் கொண்ட காங்கிரஸ் ஆட்சி நடந்தது. 1935ஆம் ஆண்டு பிரிட்டிஷார் உருவாக்கிய சட்டத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட சட்டமன்றம் அது. முதலில் பிரிட்டிஷார் உருவாக்கிய சட்டத்தையே ஏற்க மாட்டோம் என்று 'வீரம்' பேசிய அன்றைய காங்கிரஸ் கட்சி, பிறகு பிரிட்டிஷ் சட்டத்தை ஏற்றுக் கொண்டு தேர்தலில் பங்கேற்று ஆட்சி அமைக்க முன் வந்தது. பெரியாரின் 'குடிஅரசு' இதை 'சரணாகதி மந்திரி சபை' என்று விமர்சித்தது. இந்தியாவில் எட்டு மாகாணங்களில் காங்கிரஸ் அப்போது ஆட்சியைப் பிடித்திருந்தது. அப்போது இராஜகோபாலாச்சாரி வேறு எந்த மாநில காங்கிரஸ் அமைச்சரவையும் எடுக்காத ஒரு முடிவை எடுத்தார். அதுதான் இந்தித் திணிப்பு. பள்ளிகளில் இந்தியைக் கட்டாயப் பாடமாக்கி 1938 பிப்ரவரி 25ஆம் தேதி முதல் நடைமுறைக்குக் கொண்டுவர உத்தரவிட்டார். 1926ஆம் ஆண்டிலேயே அதாவது இந்த உத்தரவு வருவதற்கு 12 ஆண்டுகளுக்கு முன்பே பெரியார் 'குடிஅரசில்' ஆரிய ஆதிக்கத்தை நிலைநாட்டி, வடமொழி உயர்வுக்கு வகை தேடவே பார்ப்பனர்கள் இந்தியைத் திணிக்கிறார்கள் என்று எதிர்த்து எழுதினார். 1930ஆம் ஆண்டில் தஞ்சை மாவட்டம் நன்னிலத்தில் நடந்த ஒரு சுயமரியாதை மாநாட்டில் இந்தி நுழைவதைக் கண்டித்து பெரியார் தீர்மானம் நிறைவேற்றினார். மறைமலை அடிகளார் போன்ற தமிழ் அறிஞர்களும் இந்தியைக் கடுமையாக எதிர்த்தனர். தமிழ்நாட்டில் கடும் எதிர்ப்பு இருக்கும் என்று தெரிந்தே இராஜகோபாலாச்சாரி இந்தியைத் திணிக்கும் ஆணையைப் பிறப்பித்தார். தமிழ்நாடு கொந்தளித்தது.

1938 பிப்ரவரியில் காஞ்சிபுரத்தில் மாபெரும் இந்தி எதிர்ப்பு மாநாடு ஒன்று கூட்டப்பட்டது. மாநாட்டில் பெரியார் இந்தியை எதிர்த்து போர்முரசு கொட்டினார். "இந்தியைக் கட்டாயப் பாடமாக்குவதை ஒழித்தால் மட்டும் போதாது. அதற்கான உள் காரணங்களை ஒழிக்க வேண்டும்" என்று கூறிய பெரியார், அவை என்ன என்பதையும் விளக்கினார். "தமிழ் மக்களை புராண காலம் போல் பார்ப்பனியத்துக்கு நிரந்தர அடிமைகளாய் ஆக்குவதே, இதன் நோக்கம் சுயமரியாதை உணர்ச்சியால் ஆட்டம் கொண்டிருக்கும் பார்ப்பனிய மத உணர்ச்சியை மீண்டும் சரியானபடி புகுத்துவதற்கே இந்தித் திணிப்பு" என்று அதன் நோக்கத்தை அம்பலப்படுத்தி போராட்டத்துக்கு அறைகூவல் விடுத்தார்.

போராட்ட அணிகள் உருவாக்கப்பட்டன. போராட்டத் தலைவருக்கு 'சர்வாதிகாரி' என்று பெயரிடப்பட்டது. 1938 ஜூன் 4ஆம் நாள் சென்னையில் முதல் மறியல் போராட்டம் பெத்துநாயக்கன்பேட்டை இந்து தியாலஜிக்கல் பள்ளி முன்பு தொடங்கியது. ஒரு சர்வாதிகாரி கைதானவுடன் அடுத்த சர்வாதிகாரி தலைமையில் மறியல் நடக்கும். அதேபோல முதலமைச்சர் இராஜகோபாலாச்சாரி வீட்டின் முன்பும் மறியல் தொடங்கியது. (அப்போது முதல்வருக்கு பிரதமர் என்றே பெயர்) ஏராளமான பெண்கள் குழந்தைகளுடன் போராட்டத்தில் பங்கேற்று கைதானார்கள். தமிழ் உணர்வாளர்கள் புலவர்கள், ஆசிரியர்கள் என சமூகத்தின் பல்வேறு பார்ப்பனரல்லாத பிரிவினரும் உணர்ச்சியுடன் போராட்டத்தில் பங்கேற்று கைதானார்கள். பல்லடம் பொன்னுசாமி இராஜகோபாலாச்சாரி வீட்டின் முன் பட்டினிப் போராட்டம் தொடங்கி கைதானார்.

போராட்டக்காரர்கள் அனைவர் மீதும் அடக்குமுறை சட்டங்களை ஏவி விட்டார் இராஜகோபாலாச்சாரி. ஒத்துழையாமை இயக்கத்தில் ஈடுபட்ட காங்கிரசார் மீது பிரிட்டிஷ் அரசு பயன்படுத்திய கொடூரமான கிரிமினல் சட்டத் திருத்தத்தை அப்படியே பார்ப்பன ஆச்சாரியார் ஆட்சி கையில் எடுத்தது. 'கிரிமினல் அமென்ட்மென்ட் ஆக்ட் 7(1)(ஏ)' என்பது அந்த



**பெரியார் சிறைக்குள் அடைக்கப்பட்டிருப்பதுபோல் வடிவம் உருவாக்கப்பட்டு அதை ஊர்வலமாய் எடுத்து வந்தனர். மாநாட்டு மேடையில் தலைவர் நாற்காலியில் பெரியார் உருவப் படம் வைக்கப்பட்டிருந்தது. "என் தோளுக்குச் சூட்டிய மாலையை பெரியாரின் தாளுக்கு (காலுக்கு)ச் சூட்டுகிறேன்" என்று நாதழுதழுக்க சர். ஏ.டி. பன்னீர்செல்வம் கூறி பெரியார் படத்துக்கு மாலை சூட்டினார்.**

சட்டத்தின் பெயர். கைதானவர்கள்மீது வழக்குப் போட்டு கடுங்காவல் தண்டனை வழங்கி சிறையில் அடைத்தனர். கைதானவர்களை மொட்டை அடித்து சிறை உடை அணிவித்து, குல்லாய் போட வைத்து களியையும், கூழையும் உணவாக வழங்கியது ஆச்சாரியார் ஆட்சி.

மொத்தம் 1271 பேர் கைது செய்யப்பட்டனர். இதில் பெண்கள் 73 பேர்; குழந்தைகள் 32 பேர். 1938ஆம் ஆண்டில் இவ்வளவு எண்ணிக்கையில் கைது செய்யப்பட்டதை எண்ணிப் பார்க்க வேண்டும். போராட்ட எழுச்சியைக் கண்ட ஆச்சாரியார் எல்லாப் பள்ளிகளிலும் இந்தித் திணிப்பு என்ற ஆணையில் மாற்றம் செய்து, 125 பள்ளிகளில் மட்டும் இந்தி கட்டாயப்பாடம் என்றும் முதல் மூன்று பாரங்கள் வரை தான் இந்தி இருக்கும் என்றும் (அதாவது 8ஆவது வகுப்பு வரை) இந்தி தேர்வு நடக்கும் ஆனால் தேர்ச்சி பெறத் தேவையில்லை என்றும் அறிவித்தார்.

ஆனாலும் இந்தித் திணிப்பு ஆணையைத் திரும்பப் பெற முடியாது என்று பிடிவாதம் காட்டினார். பெரியார் பெருந்தன்மையுடன் முதலமைச்சர் வீட்டின் முன் மறியல் செய்வதைத் தவிர்க்குமாறு கேட்டுக் கொண்டார். ஆனாலும்கூட ஆச்சாரியாரின் அடக்குமுறை ஓயவில்லை.

இந்த நிலையில் திருச்சியிலிருந்து இந்தித் திணிப்பை எதிர்த்து 100 பேர் கொண்ட வழி நடை பிரச்சாரப் படை ஒன்று புறப்பட்டது. இதற்கான வழியனுப்பு விழாவை திருச்சியில் பெரியார் நடத்தினார். இந்தப் படையின் தலைவர் தஞ்சை அய்.குமாரசாமி, 'நகர தூதன்' பத்திரிகை ஆசிரியர் மணவை ரெ. திருமலைசாமி, படையின் யுத்த மந்திரி, பட்டுக்கோட்டை அழகிரி, படை அணியின் தலைவர் 1938 ஆகஸ்ட் 1ஆம் நாள் திருச்சியில் புறப்பட்ட இந்தப் படை 1938 செப்டம்பர் 11ஆம் நாள் சென்னை வந்தடைந்தது. 42 நாட்கள் 577 மைல்தூரம் நடந்தே வந்து மக்களிடம் இந்திக்கு எதிராக பரப்புரை செய்தனர். இந்தப் படைக்காக பட்டுக்கோட்டை அழகிரி கேட்டு புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் எழுதித் தந்த பாடல்தான், "எப்பக்கம் வந்து புகுந்து விடும் இந்தி? அது எத்தனைப் பட்டாளம் கூட்டி வரும்?" என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க பாடல்.

படையை வரவேற்று சென்னை கடற்கரையில் இலட்சக்கணக்கான மக்கள் திரண்டிருந்த கூட்டத்தில் பெரியார் வைத்த முழக்கம் தான், 'தமிழ்நாடு தமிழருக்கே' என்பதாகும். பெரியார் மீது ஆச்சாரியார் ஆட்சி வழக்குத் தொடர்ந்தது. 1938 நவம்பர் 26இல் பெரியார் கைதானார். 2 ஆண்டு சிறைத் தண்டனையும், ரூ.2 ஆயிரம் அபராதமும் பெரியாருக்கு விதிக்கப்பட்டது. பெரியாரின் 'ஃபோர்டு கார்' பறிமுதல் செய்யப்பட்டு, 181 ரூபாய்க்கு அரசுஅதிகாரிகளால் ஏலத்துக்கு விடப்பட்டது. பெரியார் அபராதம் கட்ட மறுத்ததால் அந்தத் தொகையை வசூலிக்க அவரது காரை ஏலம் விட்டார்கள். வழக்கம் போல பெரியார் எதிர் வழக்காட விரும்பாமல் சிறைத் தண்டனையை ஏற்றார். தண்டனை வழங்கிய சென்னை ஜார்ஜ் டவுன், நான்காவது நீதிபதி மாதவராவ் முன் பெரியார் எழுத்து வடிவத்தில் ஒரு அறிக்கையைப் படித்தார்.

(வழக்கு விசாரணை 1938 டிசம்பர் 5, 6 தேதிகளில் நடந்தது)

"நான் சம்பந்தப்படும் எந்த இயக்கமும் அல்லது கிளர்ச்சியும் அல்லது போராட்டமும் சட்டத்துக்கு உட்பட்டு வன்முறை இல்லாமல்தான் இருக்கும் என்னுடைய பேச்சுகள் இதை விளக்கும். ஆனால் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியை அடக்குமுறை மூலம் ஒடுக்கிவிடக் காங்கிரஸ் அரசு கருதுகிறது. **வீட்டுக்குள் திருடன் புகுந்தால் கையில் கிடைத்ததை எடுத்து அடிப்பேன் என முதல் மந்திரியாக பேசிவிட்டார். நீதிபதியே காங்கிரஸ் அரசுக்குக் கட்டுப்பட்டவர்; அதிலும் பார்ப்பனர். எனவே எவ்வளவு அதிக தண்டனை தர முடியுமோ அதையும் கொடுத்து இந்த விசாரணை நாடகத்தை முடித்து விடுங்கள்"** - இது நீதிபதி முன் பெரியார் தாக்கல் செய்த அறிக்கையின் ஒரு பகுதி. முதலில் சென்னை மத்திய சிறையில் அடைக்கப்பட்ட பெரியார் - பிறகு பெல்லாரி சிறைக்கு (1939 பிப்.16ல்) மாற்றப்பட்டார்.

சென்னை மத்திய சிறையில் அடைக்கப்பட்டிருந்த இந்தி எதிர்ப்பு வீரர்கள் தாளமுத்து, நடராசன் இருவரும் சிறை அடக்குமுறையால் சிறையிலே உயிர்நீத்து களப்பலியானார்கள். 1939 ஜனவரி 15ஆம் நாள் நடராசனும், மார்ச் 13ஆம் நாள் தாளமுத்துவும் வீரமரணம் அடைந்தனர். தமிழகமே கொந்தளித்தது.

1938 நவம்பர் 13ஆம் நாள் சென்னையில் கூடிய தமிழ்நாட்டுப் பெண்கள் மாநாடு மறைமலை அடிகளார் மகள் நீலாம்பிகை தலைமையில் கூடியது. இனி ஈ.வெ.ராமசாமியைப் பெரியார் என்றே அழைக்க வேண்டும் என்று மாநாடு தீர்மானித்து பெரியார் பட்டத்தை வழங்கியது. தொடர்ந்து 1938 டிசம்பர் 26, 27 நாட்களில் வேலூரில் சென்னை மாகாண தமிழர் மாநாடு கூடி தமிழர்களின் தலைவர் பெரியாரே என்று தீர்மானித்தது. அதைத் தொடர்ந்து நீதிக் கட்சியின் 14ஆவது மாகாண மாநாடு சென்னையில் கூடி பெல்லாரி சிறையிலிருந்த பெரியாரை நீதிக் கட்சியின் தலைவராக தேர்வு செய்தது.

பெரியார் சிறைக்குள் அடைக்கப்பட்டிருப்பது போல் வடிவம் உருவாக்கப்பட்டு அதை ஊர்வலமாய் எடுத்து வந்தனர். மாநாட்டு மேடையில் தலைவர் நாற்காலியில் பெரியார் உருவப் படம் வைக்கப்பட்டிருந்தது. "என் தோளுக்குச் சூட்டிய மாலையை பெரியாரின் தாளுக்கு (காலுக்கு)ச் சூட்டுகிறேன்" என்று நாதழுதழுக்க சர். ஏ.டி. பன்னீர்செல்வம் கூறி பெரியார் படத்துக்கு மாலை சூட்டினார். பெரியார் மாநாட்டுக்குத் தயாரித்து அனுப்பிய உரையை ஏ.டி. பன்னீர்செல்வமே படித்தார். வரலாறுகளே தலைவர்களை உருவாக்குகிறது என்பதற்கு இது மகத்தான சான்று.

மாநாட்டில் திரண்டிருந்த அனைவரும் எழுந்து நின்று, "எங்கள் மாபெரும் தலைவரே! உங்கள் உடல் சிறைபடுத்தப்பட்டிருந்தாலும், உங்கள் வீரத் திரு உருவத்தின் முன் நாங்கள் அனைவரும் எழுந்து நின்று ஒன்றுபட்டிருக்கிறோம். உங்கள் தலைமையில் நாங்கள் அனைவரும் செயல் வழி நின்று, கட்சி வளர, மக்கள் வாழ, நோக்கம் நிறைவேற ஓயாது உழைத்து வெற்றி பெறுவோம்" என்று உறுதி ஏற்றனர். தமிழிலும் தெலுங்கிலும் அந்த உறுதிமொழி ஏற்கப்பட்டது.

பெல்லாரி சிறையில் கடும் வெப்பத்தில் அவதியுற்ற பெரியார், வயிற்று நோயினால் பாதிக்கப்பட்டார். இந்த நிலையில் சென்னை மாகாண அரசு 1939ஆம் ஆண்டு மே 22ஆம் நாள் சுமார் 6 மாத சிறைவாசத்துக்குப் பிறகு திடீரென்று விடுதலை செய்தது. 190 பவுண்டு எடையுடன் சிறைச் சென்ற பெரியார், 24 பவுண்டு எடை இழந்து வெளியே வந்தார். கைது செய்யப்பட்ட தோழர்களில் ஒரு பகுதியினர் 1939 ஜூன் 6ஆம் நாள் ஒரு அணியாகவும், 1939 நவம்பர் 15ஆம் நாள் ஒரு அணியாகவும் 7 மாத சிறைவாசத்துக்குப் பிறகு விடுதலை செய்யப்பட்டனர்.

வடசென்னைப் பகுதியில் இந்தி எதிர்ப்புப் போராளிகள் நடராசன், தாளமுத்து கல்லறை நினைவுச் சின்னம் இப்போதும் இருக்கிறது. இந்தக் கல்லறைக்கு 1940 மே 5ஆம் நாள் அடிக்கல் நாட்டியவர் பெரியார்.

**(தொடரும்)**

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/19-21 ~~LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2016-2018~~
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# கழகம் எடுத்த தமிழர் திருநாள் விழாக்கள்




**சென்னை :** திருவல்லிக்கேணியில் 19ஆம் ஆண்டாக தமிழர் திருநாள்...பொங்கல் விழா 13.01.2019 இராயப்பேட்டை வி.எம்.தெருவில் (பெரியார் சிலை அருகே) மாலை 6 மணிக்கு புதுவை அதிர்வு கலைக்குழுவினரின் பறை யிசை முழக்கத்தோடு தொடங்கியது.

கிராமிய கலை பண்பாட்டு பாடல்களோடு பகுதி பொதுமக்களின் ஆரவாரத் தோடும் கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன், மே 17 இயக்க ஒருங்கிணைப்பாளர் திருமுருகன் காந்தி, பேராசிரியர் சரசுவதி, மக்கள் நீதி மய்யம் சௌரிராஜன், மணிமேகலை மற்றும் திருநங்கைக்காண உரிமை மீட்பு இயக்கத்தைச் சார்ந்த அனுஸ்ரீ, ஆர்.என்.துரை (திமுக, சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர்), வழக்கறிஞர் திருமூர்த்தி ஆகியோர் வந்திருந்து சிறப்பித்தனர். நிகழ்வினை இரா.உமாபதி (தென்சென்னை மாவட்டச் செயலாளர்) ஒருங்கிணைத்தார். தொடர்ச்சியாக சிலம்பாட்டம், மயிலாட்டம் போன்ற கலை நிகழ்ச்சிகள் சிறுவர், சிறுமியர்களின் நடன நிகழ்ச்சியும் நடைபெற்றது. இறுதியாக அருண் ரிதம்ஸின் சென்னை கானா, திரைப்படப் பாடல்களோடு மகிழ்ச்சியோடு விழா நிறைவுற்றது.




**திருப்பூர் :** திருப்பூர் மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் சார்பாக தமிழ் புத்தாண்டு பொங்கல் விழா மற்றும் விளையாட்டுப் போட்டிகள், இசை நிகழ்ச்சி 15.01.2019) செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணி முதல் மாலை வரை பெரியார் திடல், பெரியார் படிப்பகம், வீரபாண்டி பிரிவில் நடைபெற்றது.

காலை 10 மணி அளவில் தோழர் சரசுவதி பொங்கல் வழங்கி நிகழ்வினை தொடங்கி வைத்தார். குழந்தைகளுக்கான விளையாட்டு போட்டிகள் நடைபெற்றது . மாலை பள்ளத்தூர் நாவலரசு குழுவினரின் இசை நிகழ்ச்சி நடைபெற்றது. கழகத் தோழர்கள் மற்றும் தோழமை இயக்கத் தோழர்கள் உரையாற்றினர்.

பரப்புரை செயலாளர் பால் பிரபாகரன், பொருளாளர் துரைசாமி சிறப்புரையாற்றினர். விளையாட்டுப் போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. நிகழ்வில் திருப்பூர் தோழர்களுடன் ஈரோடு, இராசிபுரம், கோவை, மடத்துகுளத்தைச் சேர்ந்த தோழர்களும் கலந்து கொண்டனர்.




**குலசேகரம்:** திராவிடர் விடுதலைக் கழகம், குமரி மேற்கு மாவட்டம் நடத்திய தமிழர் திருநாள் பொங்கல், தமிழ்ப் புத்தாண்டு, திருவள்ளுவர் பிறந்த நாள் விழா தெரு முனைப் பரப்புரைக் கூட்டமாக குலசேகரம் அரசமூடு சந்திப்பு பகுதியில் பெரியார் தொழிலாளர் கழக மாவட்டத் தலைவர் நீதிஅரசர் தலைமையில் நடைபெற்றது. தமிழ்அரசன் வரவேற்புரையாற்றினார்.

வழக்குரைஞர் சிபு, தமிழ்மதி (மேற்கு மாவட்ட பொறுப்பாளர்), போஸ் (மார்க்சிய சிந்தனை மையம்) ஆகியோர் உரையாற்றினர். மஞ்சுகுமார் நன்றி கூறினார். வின்செென்ட், சஜின், இளங்கோ, இரமேஸ் பாபு ஆகியோர் கலந்து கொண்டனர்.

## விழுப்புரம் மாவட்ட கலந்துரையாடல் கூட்டம்

திராவிடர் விடுதலைக் கழக விழுப்புரம் மாவட்ட கலந்துரையாடல் கூட்டம் 19-12-2018 (தி.பி-2049- புதன்) அன்று நடைபெற்றது. கூட்டத்தில் அமைப்பு செயலாளர் இரத்தினசாமி, பொருளாளர் துரைசாமி, தலைமைக் குழு உறுப்பினர்கள் சூலூர் பன்னீர் செல்வம், அய்யனார், கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாகக் கலந்து கொண்டனர். 2019ஆம் ஆண்டிற்கான நிகழ்வுகள் குறித்தும், ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ மற்றும் ‘நிமிர்வோம்’ மாத இதழ் உறுப்பினர் சேர்க்கைக் குறித்தும் விரிவாக பேசப்பட்டது. ‘புரட்சிப் பெரியார் முழக்கத்’திற்கான 97 உறுப்பினர்களுக்கான தொகை 9400 ரூபாயை கழகத் தலைவர் கொளத்தூர் மணியிடம் வழங்கப்பட்டது. கீழ்க்கண்ட பொறுப்பாளர்களை கழகத் தலைவர் அறிவித்தார். விழுப்புரம் மேற்கு மாவட்ட பொறுப்பாளர்களாக தலைவர் - க.மதியழகன், செயலாளர் - க.இராமர், துணைச் செயலாளர்-மு.நாகராசன், தமிழ்நாடு மாணவர் கழக மாவட்ட ஒருங்கிணைப் பாளர்- அ.பெரியார் தாசன், அறிவியல் மன்ற அமைப்பாளர்- வீ.முருகன், மாவட்ட அமைப்பாளர்- சி- சாமிதுரை, ரிசிவந்திய ஒன்றிய அமைப்பாளர்- இரா.கார்மேகம், சங்கராபுரம் ஒன்றிய அமைப்பாளராக - வே.இராசேசு, கல்லக்குறிச்சி நகர அமைப்பாளர்- மு.சங்கர் ஆகியோர் நியமிக்கப் பட்டனர்.

## கரு. அண்ணாமலை வளர்ச்சி நிதிக்கு ரூ.5 ஆயிரம் வழங்கினார்



திராவிடர் விடுதலைக் கழகத் தோழர் கரு. அண்ணாமலையின் ‘அன்பு பழச்சாறு மற்றும் தேனீர் அகத்’தை கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஜனவரி 11 அன்று காலை திறந்து வைத்தார். கழக வளர்ச்சிக்கு ரூ.5000/- கரு.அண்ணாமலை வழங்கினார்.

(முதல் பக்கத் தொடர்ச்சி)

பொறியியல் போன்ற உயர் கல்வி பெற இப்போதுள்ள தடையை நீக்க வேண்டும். தனியார் துறையிலும் அரசுத் துறையிலும் அவர்களின் வேலைவாய்ப்புக்கு இப்போதுள்ள வழித் தடைகள் அனைத்தையும் களைந்திட வகை செய்ய வேண்டும்.

7) சட்டம் பயின்று தகுதி பெற்ற தமிழீழ ஏதிலியர் நீதிமன்றங்களில் வழக்குரைஞராகப் பணியாற்ற இப்போதுள்ள தடையை நீக்க வேண்டும்.

8) ஏதிலியரின் கண்ணியமிக்க மாந்த வாழ்வுக்கு ஏற்ற வகையில் ஏதிலியர் முகாம்களில் வீட்டு வசதியும் பிற குடிமை வசதிகளும் செய்து தர வேண்டும், ஏதிலியர்க்கான அரசின் உதவித் தொகையை உயர்த்திக் கொடுக்க வேண்டும்.

9) இலங்கை திரும்ப விரும்பும் ஏதிலியரிடம் இந்நாட்டில் மிகைத் தங்கலுக்காகத் தண்டம் விதிப்பதைக் கைவிட வேண்டும். உடனடியாகத் தண்டத் தொகையைப் பெரிதும் குறைக்க வேண்டும்.

தமிழகத்தில் ஈழத் தமிழர்கள் அயலாராகவும் குற்ற மரபினராகவும் நடத்தப் படுவது வருந்தத்தக்க உண்மையாக இருக்கிறது. இந்த அவல நிலையை மாற்ற மேற்கண்ட கோரிக்கைகளை நிறைவேற்றி ஈழ ஏதிலிகளின் உரிமைகளை உறுதி செய்யுமாறு தமிழீழ ஏதிலியர் உரிமைக் கூட்டமைப்பின் சார்பில் கேட்டுக் கொள்கிறேன் என்று மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஏப்.7இல் மதுரையில் நீலச் சட்டைப் பேரணி




ஏப்ரல் 7ஆம் தேதி புரட்சியாளர் அண்ணல் அம்பேத்கர்பிறந்த நாளை முன்னிட்டு மதுரையில் நீலச்சட்டை பேரணி மற்றும் சாதி ஒழிப்பு மாநாடு நடத்தவும்; முற்பட்ட வகுப்பினருக்கு பொருளாதார அடிப்படையில் 10% இட ஒதுக்கீடு என்ற சட்டத்திருத்தத்தின் மூலம், இடஒதுக்கீட்டினை முற்றிலுமாக அழிக்க நினைக்கும் பாஜக அரசினைக் கண்டித்து, இந்த மாதம் 27ஆம் தேதி தமிழகம் வரும் மோடிக்கு எதிராக கருப்புக் கொடி போராட்டம் நடத்தவும் முடிவு எடுத்துள்ளது. பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பு ஜனவரி 1 அன்று நடைபெற்ற பத்திரிக்கையாளர் சந்திப்பில் இது அறிவிக்கப்பட்டது.

இந்த பத்திரிக்கையாளர் சந்திப்பில் திராவிடர் விடுதலைக் கழகத்தின் தலைவர் கொளத்தூர் மணி, தந்தை பெரியார் திராவிடர் கழகத்தின் பொதுச் செயலாளர் கோவை ராமகிருட்டிணன், தமிழக மக்கள் முன்னணியின் ஒருங்கிணைப்பாளர் பொழிலன், தமிழ்ப் புலிகள் கட்சியின் தலைவர் நாகை திருவள்ளுவன், விடுதலை தமிழ்ப் புலிகள் கட்சியின் தலைவர் குடந்தை அரசன், மார்க்சியப் பெரியாரிய பொதுவுடைமைக் கட்சியின் பொறுப்பாளர் பச்சைமலை, தமிழர் விடியல் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் டைசன், நீரோடை அமைப்பின் தோழர் நிலவன், அம்பேத்கர் சிறுத்தைகள் இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் தெய்வமணி, தமிழர் தேசிய விடுதலை இயக்கத்தின் தலைவர் ஜோசப் கென்னடி, தமிழர் விடுதலைக் கழகத்தின் ஒருங்கிணைப்பாளர் சுந்தரமூர்த்தி, இளந்தமிழகம் இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் செந்தில், தமிழ்நாடு மக்கள் கட்சியின் ஒருங் கிணைப்பாளர் இளையராஜா, தமிழ்நாடு குடியரசு கட்சி - மே பதினேழு இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் திருமுருகன் காந்தி ஆகியோர் பங்கேற்றனர்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 25th January 2019

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN